13th November 1961]

Harijan Welfare (Schools)

*2049 *Q.*—SRI T. S. RAMASWAMI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR): Will the Hon. the Minister for Works be pleased to state:

(*a*) the number of "adult literary schools" and the "Welfare Schools" run by the Harijan Welfare Department in this State;

(*b*) the number of persons instructed in these institutions, and

(*c*) the amount spent during 1959 and 1960?

THE HON. SRI P. KAKAN: (*a*) Number of Adult Literary Schools—35.

Number of Harijan Welfare Schools—844

(*b*) Adult Literary Schools—1,133 persons.

Harijan Welfare Schools—84,560 persons.

(*c*)—

	Harijan Welfare Schools	*Adult Literary Schools.*
1959 ..	Rs. 21,95,170·74 n.p.	Rs. 7,251·45 n.p.
1960 ..	Rs. 20,64,063·91 n.p.	Rs. 8,173·39 n.p.

SRI V. K. RAMASWAMY MUDALIAR: Can the Minister tell us whether he is satisfied with working of the Adult Literary Schools?

THE HON. SRI P. KAKKAN: I think the Adult Literary Schools in the Kanyakumari district are being conducted satisfactorily.

SRI N. MARUDACHALAM: இந்த ஹரிஜன முதியோர் கல்வித் திட்டம் எந்த எந்த ஜில்லாக்களில் நடைபெறுகின்றன?

THE HON. SRI P. KAKKAN: கன்யாகுமரி ஜில்லாவில் நடைபெறுகிறது; இன்னும் சில ஜில்லாக்களிலும் நடைபெறுகின்றன. தனிக்கேள்வி போட்டால், விவரங்கள் கொடுக்கிறேன்.

SRI M. K. SOMASUNDARAM: ஸார், ஹரிஜன பள்ளிக்கூடங்களுக்காக சர்க்காரிலிருந்து கொடுக்கப்பட்ட பணம் டைரக்டர் அவர்களால் செலவழிக்காமல், திரும்பவும், சர்க்காருக்கு ரிபண்ட் செய்யப்பட்டிருக்கிறதா? அப்படியானால், எவ்வளவு பணம் அப்படி ரிபண்ட் செய்யப்பட்டது?

THE HON. SRI P. KAKKAN: பொதுவாக கனம் அங்கத்தினர் கேட்கிறார்; மூலக் கேள்வி அடல்ட் ஸ்கூல், எலிமெண்டரி ஸ்கூல் பற்றியது. தனிக் கேள்வி போட்டால் அதைப் பற்றிச் சொல்லுகிறேன்.

SRIMATHI SATHIAVANIMUTHU: ஸார், சுமார் எத்தனை வயதுக்கு உட்பட்டவர்கள் இந்த முதியோர் கல்வியால் பயன் அடைகிறார்கள்?

[13th November 1961

THE HON. SRI P. KAKKAN : அநேகமாக 20, 21 வயதிற்கு மேல், 60 வயது வரைகூட, படிக்கவேண்டுமானால், படிக்கலாம்.

SRI P. G. MANICKAM : எந்தெந்த இடங்களில் ஹரிஜன நல பள்ளிக்கூடங்கள் சர்க்காரால் ஆரம்பிக்கப்பட்டன, அவற்றிற்கு எவ்வளவு மனுக்கள் அனுப்பப்பட்டன ?

THE HON. SRI P. KAKKAN : கேள்வி நடைமுறையிலே உள்ள பள்ளிக்கூடங்களைப் பற்றியது. தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்லுகிறேன்.

SRI T. IRUSAPPAN : ஸார், ஹரிஜன ஸ்கூல்களில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும், மற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்ட சம்பள உயர்வு போன்று கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

DEPUTY SPEAKER : The hon. Member may put a separate question.

SRI A. GOVINDASAMI : முதியோர் பள்ளிக்கூடங்கள் இரவு நேரத்தில் நடத்துவதற்கு, விளக்கு வசதியும், ஆசிரியர்களுக்குப் போதுமான ஊதியமும் இல்லாததன் காரணத்தினால், பல பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அவைகளுக்கு வேண்டிய வசதிகள் சீக்கிரமாகவே செய்யப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : என்னிடம் உள்ள லிஸ்டில் பார்த்தால், தென்னார்காட்டில் அப்படிப்பட்ட பள்ளிக் கூடங்களே இல்லை. ஆகவே, அந்தக் குறைகள் அங்கு இருக்க முடியாது என்று தெரிகிறது.

SRI K. PONNIAN : ஸார், ஜாதி ஒழியவேண்டும் என்று பாடுபடும் நம் சர்க்கார், ஹரிஜனப் பள்ளிகளை மேலும் மேலும் துவக்கிக் கொண்டே போய், ஜாதித் துவேஷத்தை வளர்ப்பதற்குப் பதிலாக, எல்லாப் பள்ளிக்கூடங்களையும் சர்க்காரே எடுத்து நடத்த முன்வருவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : அதைப் பற்றியும் அரசாங்கம் யோசித்தது. இப்பொழுது எந்த எந்த பள்ளிக்கூடங்கள் நடைபெற்று வருகின்றனவோ அவைகள் அப்படியே நடக்கும். ஆனால், புதிதாக நாம் ஹரிஜனங்களுக்காக தனியாகப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதில்லை. எஜுகேஷன் டிபார்ட்மெண்டோ அல்லது இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பஞ்சாயத்து யூனியன்களோ நடத்த முடியாமல், வேறு வழியில்லாமல் இருந்தால், கலெக்டர் ஆலோசனையின் பேரில், துவங்கப்படும். ஆனால், புதிதாக இனிமேல் ஹரிஜனங்களுக்கென்று தனியாக பாடசாலைகள் வைப்பதில்லை என்பது கொள்கை.

Literacy

* 2050 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state the percentage of literacy in the State in the year (i) 1946 and (ii) 1959?